<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,</u>
<u>ஜெயங்கொண்டம்.</u>
<u>C.C.No. 66/2022</u>

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி-02, திரு.முருகபாண்டியன் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.முருகபாண்டியன் | வயது | : | 33/26 |
| த.பெ/ க.பெ. | : | இரத்தினசாமி | தொழில் | : | ஓட்டுநர் |
| ஊர் | : | அர்த்தனேரி | நிலை | : | LW02 / PW02 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**( எதிரி ஆஜர் இல்லை. அவர் தரப்பு வழக்கறிஞரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டு ,மனு அனுமதிக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் அர்த்தனேரியில் வசித்து, தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன கருப்பையா என் ஊர்க்காரர். அ.சா.1 ஐ தெரியும். அவர் கருப்பையாவின் பேரன் ஆவார். கடந்த 01.04.2021ம் தேதி காலையில், நான் எனது வீட்டிலிருந்து ஜெயங்கொண்டத்திற்கு சவாரிக்கு செல்வதற்காக எனது டாடா ஏசி வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தபோது, எங்கள் ஊரிலிருந்து ஜெயங்கொண்டம் செல்லும் ரோட்டில் 200 மீட்டர் தொலைவில் கருப்பையா சைக்கிளில் சென்றுக்கொண்டிருந்தவர், சாலையின் குறுக்காக கடந்தபோது, ஜெயங்கொண்டத்திலிருந்து கும்பகோணம் செல்லும் பேருந்து கருப்பையா மீது மோதி, விபத்தை ஏற்படுத்தியது. நான் சென்று

பார்த்தபோது, கருப்பையா அடிபட்டு கீழே கிடந்தார். நான் அ.சா.1 க்கு போன் செய்து தகவல் சொன்னேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1)நான் என் வாகனத்தை எடுத்து, மெயின்ரோட்டையொட்டி நிறுத்தியிருந்தேன். அப்போது கருப்பையா சாலையை பாதியளவு கடந்து வந்தபோது, விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் லேசான வளைவு உள்ளது என்றால் சரிதான். கருப்பையா ரோட்டின் இருபுறமும் பார்த்து, வாகனங்கள் வருவதை கவனித்து, சாலையை கடந்திருந்தால், இந்த விபத்து நடக்க வாய்ப்பு இல்லை என்றால் சரிதான்.

2) கருப்பையாவிற்கு வயது 70 இருக்குமென்றால் சரிதான். கருப்பையா சைக்கிளை ஓட்டிக்கொண்டுதான் சாலையை கடந்தார் என்றால் சரிதான். எங்கள் ஊருக்கு அருகில் விபத்துகள் அதிகம் நடந்துள்ளது என்றால் சரிதான். நான் கருப்பையா வீட்டிற்கு பக்கத்து வீடு என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் இல்லையென்றாலும், கருப்பையா என் பக்கத்துவீட்டுக்காரர் என்பதால், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில் சம்பவ இடத்தில் இருந்ததாகவும், சம்பவம் குறித்து அ.சா.1 க்கு போன் மூலம் தகவல் சொன்னேன் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

3) வாகனங்கள் வருவதை கவனிக்காமல் கருப்பையா திடீரென்று சாலையை கடந்ததுதான் இந்த விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. நான் சொல்லும்பேருந்து விருத்தாச்சலத்திலிருந்து கும்பகோணம் செல்லும் விரைவு பேருந்து என்றால் சரிதான்.

மேற்படி பேருந்து எங்கள் ஊரில் நிற்காது என்றால் சரிதான். மேற்படி இடத்தில் வேகத்தடை எதுவுமில்லை என்றால் சரிதான்.

/ உண்மை நகல் /

ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்